IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.121/2006
DEPOSITION OF WITNESS

பி.வா.சா.2 சாட்சி அமல்ராஜ் த.பெ.சோலைமலை

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 23.02.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் குராயூர் மேலத்தெருவில் குடியிருந்து வருகிறேன். சோனைத்தேவர் எனது மனைவியின் தந்தை என்றால் சரிதான். பிரதிவாதிகள் கிரையம் குறித்து எனக்கு நேரடியாக தெரியும் என்றால் தெரியாது. எனது மாமா கிரையம் வாங்கிய சொத்திற்கு நான்குமால் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி கிரைய பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் வாங்கப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

2. அதன் விஸ்தீரணம் தெரியுமா என்றால் கிழமேல் 200 அடி ஆகும். தென்வடல் எவ்வளவு என்றால் நினைவில் இல்லை. எனது மாமா கிரையம் வாங்கும்போது அது காலி மனைகளாகத்தான் இருந்தது என்றால் சரிதான். தற்போது மேற்படி காலி மனையில் என்ன உள்ளது என்றால் வீடுகள் உள்ளது. மேற்படி வீட்டிற்கு வடக்கே பிச்சைத்தேவர் வீடு உள்ளது என்றால் சந்து உள்ளது. சந்திற்கு வடக்கே பிச்சைத்தேவர் வீடு உள்ளது என்றால் சரிதான். பிச்சைதேவருக்கு தென்வடலாக 33 அடி வாங்கி அனுபவம் செய்து வரும் விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3. பிச்சைத்தேவரின் வடக்கே சின்னுத்தேவர் வீடு உள்ளது என்றால்

சரிதான். சர்வே எண். 214/19, 214/20 உள்ள புல வரைபடத்தை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். எனது வீடு எனக்கு பாத்தியப்பட்ட வீடு என்றால் சரிதான். மேற்படி வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது வீட்டின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.214/20 யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் பிச்சைத்தேவரின் இடமாகும். சர்வே எண். 214/23 வடக்கே எந்த சர்வே எண் உள்ளது என்றால் சந்து உள்ளது. சந்திற்கு சர்வே எண். 22 ஆகும். எனது வீட்டின் சர்வே எண் தெரியாது என்றாலும் வழக்கு சொத்து குறித்து விபரங்கள் பிரதிவாதி சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் வீட்டின் வடக்கு சுவர் ஜன்னல், நிலைக்கதவு எதுவும் இல்லை என்றால் சரிதான். மேற்படி வீட்டின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண். 214/22 எனது மாமனார் எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றாலும் எனது மாமனாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சர்வே எண். 214/22 ஐ எனது மாமனார் கிரையம் வாங்கவில்லை என்றால் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டதாகும்.

4. சர்வே எண். 214/22 ஐ எனது மாமனாரோ, பிரதிவாதிகளோ எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றாலும் வாதிகள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.23 14:28:51 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.